1970 மார்ச் 30]

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வாழக்கூடிய மக்கள் ஏறக்குறைய 15 ஆண்டுகளாக அங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். கலெக்டரிடத்திலே எப். சி. ஆர். கட்டிக்கொண்டு வருகிறார்கள். அவர்களை அகற்றக்கூடிய அந்த உத்தரவு சென்றவுடனே அவர்கள் எல்லாம் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களைச் சந்தித்ததன் விளைவாக ரெவின்யூ இலாகா 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் தேதியன்று மூன்று மாதங்களுக்கு அவர்களை அகற்றக்கூடாதென்று ஸ்டே உத்தரவு கொடுக்கப்பட்டிருந்தும் அதை மீறி கார்ப்பரேஷன் அஸிஸ்டெண்ட் கமிஷனர் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு அப்படிச் செய்தது அரசாங்கமே அரசாங்க உத்தரவை மீறக்கூடிய அளவுக்குப் போகக் கூடிய நிலைமையிருப்பதால் மக்கள் பரபரப்பு அடைந்துள்ளார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அப்படிச் செய்ததற்கு என்னிடத்திலே செயற்குறிப்பு இல்லை. லட்சக்கணக்கான மக்களுக்குத் தண்ணீர் வழங்குகின்ற முறையிலே அந்தத் தண்ணீரை சாக்கடைத் தண்ணீராக, நல்ல தண்ணீரை தூய்மை கெடக்கூடிய தண்ணீராகச் செய்யும் நிலைமை இருப்பதாலே அப்படித் தூய்மை கெடுவதைத்தடுப்பதற்காகச் சட்டபூர்வமான நடவடிக்கை எடுப்பது மாநகராட்சி அதிகாரிகளுடைய கடமையாகும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொன்னார்கள். ஒருமுறை நானே நேரில் சென்று பார்த்திருக்கிறேன். பல இடங்களில் தண்ணீர் போகின்ற இடங்களிலும், ட்ரெயினேஜ் இருக்கிற இடங்களிலும் குடிசைகள் போடப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அவற்றிலே பழுது ஏற்பட்டுவிட்டால். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, பிரிக்கப்பட்ட குடிசைகளைப் பற்றியது.

திரு. நா. வீராசாமி: அப்படிப் பழுது ஏற்படுகின்ற நேரங்களில் குடிசைகள் இருப்பதால் பழுதுபார்ப்பதுகூட முடியாமல் இருக்கிற நிலை எல்லாம் இருக்கிற காரணத்தினாலே இனிமேலாவது அப்படிப்பட்ட இடங்களில் குடிசைகள் போடாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அமைக்கப்பட்டிருக்கின்ற குடிசைகள் காரணமாக தண்ணீர் கெடுகின்ற நிலைமை ஏற்படுமானால் அவ்வப்பொழுது நடவடிக்கைகள் அதைத் தடுக்கின்ற முறையிலே எடுக்கப்பட்டு வருகின்றன. அகற்றப்படுகிற இடங்களிலே மீண்டும் குடிசைகள் போடப்படுவதாலே மீண்டும் அவற்றை அகற்றவேண்டிய சூழ்நிலை மாநகராட்சிக்கு ஏற்படுகிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து ரெவின்யூ இலாகாவிலிருந்து ஸ்டே கொடுத்ததாக தன் இலாகாவுக்குத் தெரியாது என்று பொருள்படக் கூறினார்கள். அமைச்சர்களுக்குள் இருக்கவேண்டிய கோஆர்டினேஷன், இணைப்பு என்று சொல்வார்களே அதுகூட இல்லாத காரணத்தினாலேதான் அங்கேயுள்ள சாதாரண மக்கள் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். இனிமேலாவது இதுபோன்ற நிலைமை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சாமானிய மக்களிடத்திலே இருக்கிற அக்கறையைவிட இந்த அரசுக்கு அந்த மக்களிடத்திலே அதிக அக்கறை இருக்கிறது. வருவாய்த்துறை தடையுத்தரவு விதித்ததற்கான விவரம் இல்லையென்றுதான் கூறினேனேதவிர, இந்த இலாகாவுக்கும் அந்த இலாகாவுக்கும் தொடர்பில்லையென்று நான் கூறவில்லை. இப்படிப்பட்ட மோதல்களை ஏற்படுத்திக் குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்று கருதத் தேவையில்லை.

Thiru K. VINAYAKAM : Though on the point that the hut dwellers caused pollution to the drinking water supplied by the Corporation there is no difference of opinion, after de-housing them, after demolishing the huts, were they given alternative sites anywhere to enable them to live or are they shifting from place to place and just continuing the pollution of the drinking water?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொதுவாக அருகிலே உள்ள வேறு இடங்களிலே அவர்களுக்கு இயலுமானால் இடம் தரப்படுகிறது. ஹவுசிங் போர்டு மூலமாகவும் தேவையான இடத்தை ஒதுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ இலாகாவிலிருந்து வந்த உத்திரவு அமைச்சர் அவர்களுடைய செயற்குறிப்பில் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த உத்திரவு அஸிஸ்டெண்ட் கார்ப்பரேஷன் கமிஷனர் இடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவு எண் 67197-பி2/69—1 தேதி 24—7—1969, எ. எஸ். பதமநாபன், டெபுடி செகரட்டரி என்று கையெழுத்திட்டுள்ள அந்த உத்தரவையும் பொருட்படுத்தாமல் நடவடிக்கை அந்த அஸிஸ்டெண்ட் கமிஷனர் எடுத்திருக்கிறார் என்று சொன்னால் இது சட்டபூர்வமான நடவடிக்கை என்று சொல்ல முடியுமா? அரசாங்க அதிகாரிகளே ஸ்டே உத்தரவை மீறி நடவடிக்கை எடுத்தால் மற்றவர்களுக்கும் அப்படிப்பட்ட சட்டவிரோதச் செயலைச் செய்ய ஊக்கம் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது ஆகாதா? அங்கே பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தேதி என்ன சொன்னீர்கள்?

திரு. சி. கோவிந்தராஜன் : 24—7—1969 அன்று.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை விசாரித்துத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

Rajaji market at Kancheepuram.

* 607 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Kancheepuram Municipality has suffered losses in running Rajaji market in 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1968–69-ம் ஆண்டில் நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக மொத்தம் ரூ. 1,08,860 வசூலிக்கப்பட்டது. வசூல் பணியாளர்களுக்காக ஏற்பட்ட மொத்தச்செலவு ரூ. 18,159 ஆகும். ஏலத்தில் கேட்கப்பட்ட அதிக அளவுத் தொகை ரூ. 93,100 ஆகும். வசூலையும் குத்தகைக்கு விட்டிருப்பின், குத்தகைக்காரர் துப்புரவுச் செலவுக்காக நகராட்சிக்கு ரூ. 6,118 செலுத்தியிருப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

TRUTH ALONE TRIUMPHS